**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 125** **நாள்: 28.02.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பொதுப் போக்குவரத்து மற்றும் பொது இடங்களில் எதிர்கொள்ளும் பாதுகாப்பு சவால்களைக் கருத்தில் கொண்டு "The Bystander Intervention" – பார்வையாளர் தலையீடு செய்வதன் அவசியம் மற்றும் பாதுகாப்பான, பொறுப்பான செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில், மாநகராட்சிப் பகுதிகளில் பொதுப் போக்குவரத்து மற்றும் பொது இடங்களில் எதிர்கொள்ளும் பாதுகாப்பு சவால்களைக் கருத்தில் கொண்டு "The Bystander Intervention" – பார்வையாளர் தலையீடு செய்வதன் அவசியம் மற்றும் பாதுகாப்பான, பொறுப்பான செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 27.02.2026 அன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் மாநகராட்சியின் மூலமாக பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறாக, பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில், பெண்களின் பாதுகாப்பு மற்றும் சமூக பொறுப்புணர்வை வலுப்படுத்தும் நோக்கில் "Bystander Intervention Training Program" 5 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டு, 23.02.2026 அன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கிலும், 24.02.2026 அன்று வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அன்னை தெரசா வளாகத்திலும், 25.02.2026 அன்று விக்டோரியா பொது அரங்கத்திலும், 26.02.2026 அன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. தொடர்ந்து, நிறைவு விழாவாக 27.02.2026 அன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

ஒவ்வொரு நாளும் இந்த பயிற்சி திட்டத்தில் 200 பெண்கள் மற்றும் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 100 பேருந்து ஓட்டுநர்கள். நடத்துநர்கள் கலந்து கொண்டனர். சுமார் 2000-க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இந்த நிகழ்ச்சியின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த பயிற்சிகள் நடைபெற்ற அனைத்து நாட்களிலும் தெருநாடகம், குறும்படம் திரையிடல், கலந்துரையாடல் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், 27.02.2026 அன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பெண்கள் எதிர்நோக்கும் அசாதாரண சூழ்நிலைகள் மற்றும் அதில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பான தலையீட்டு முறைகள் குறித்து தெரு நாடகம், ஒயிலாட்டம் ஆகியவற்றின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு விளக்கப்பட்டது.

நிறைவு விழாவில் திரைப்பட நடிகை/இயக்குநர் திருமதி சுஹாசினி மணிரத்னம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பெண்கள் பாதுகாப்பு குறித்து வாழ்வில் நடந்த உண்மை நிகழ்வுகளை எடுத்துக்காட்டி, "பாத்துக்கிட்டு போகாதீங்க... பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்" என்ற கருத்தை வலியுறுத்தினார். மேலும், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் பெண்கள் பயணிகளுக்கான சகோதரர்களாக இருந்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என ஊக்கமளித்தார்.

உலக வங்கியின் மூத்த ஆலோசகர் திரு. வெங்கடேஷ் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (TNIDP) சார்பில், பார்வையாளர் தலையீடு செய்வதன் முக்கியத்துவத்தை விரிவாக விளக்கினார்.

சமூகத்தில் ஒவ்வொருவரும் பார்வையாளராக இல்லாமல் பொறுப்பான தலையீட்டாளராக செயல்பட வேண்டிய அவசியம் குறித்தும், பார்வையாளர் தலையீடு குறித்த நடைமுறைப் பயிற்சியும், அச்சூழ்நிலையில் பாதுகாப்பாக செயல்படுதல், உடனடி உதவி வழங்கும் முறைகள், தன்னையும், பாதிக்கப்பட்டவரையும் பாதுகாக்கும் வழிமுறைகள் மற்றும் அவசர எண்கள் தொடர்பான தகவல்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், பெண்கள் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்தும், அவசர சூழ்நிலைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் மன அழுத்த நிலைகள் மற்றும் அத்தகைய தருணங்களில் பார்வையாளர்கள் எவ்வாறு ஆதரவாக செயல்பட வேண்டும் என்று விளக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உளவியல் நிபுணர் திருமதி வனஜா, தகவல் தொடர்பு நிபுணர் திருமதி கிருத்திகா, மாநகராட்சி பாலின மற்றும் கொள்கை ஆய்வகக் குழுத் தலைவர் முனைவர் லெஜிஸ், Aqua Organization சார்பில் திருமதி சுபா பாண்டியன், திருமதி சுனிதா மற்றும் திருமதி காயத்ரி, சமூகநலத்துறை அலுவலர், நலம்தானா தொண்டு நிறுவனம், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**